# இலங்கை ஜனாதிபதி பதவியை விட்டுச் செல்லும் போது வழக்கை மீண்டும் தாக்கல் செய்ய திட்டமிடும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள்.

**04** டிசெம்பர் 2019

**ஜொகானஸ்பேர்க் , தென்ஆபிரிக்கா :** சித்திரவதையால் ஏற்பட்ட சேதங்களுக்காக அமெரிக்காவில் கோட்டபாய ராஜபக்சவிற்கு எதிராக வழக்குத் தொடுத்த பதினொரு இலங்கையர்கள், திரு ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாக இருந்து தண்டனையில் இருந்து பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதிலிருந்து அவரை தடுக்கும் அதேவேளையில் தமது வழக்கினைப் பின்வாங்கிக் கொள்ளும் தந்திரோயாபமாக முடிவினை மேற்கொண்டுள்ளார்கள். இந்த நகர்வானது அவர் பதவியை விட்டுச் சென்ற பின்னர் வழக்கினை மீளத்தாக்கல் செய்யக்கூடியதாக பாதிக்கப்பட்டவர்களின் உரிமையைப் பாதுகாக்கும்.

*''வாழ்நாள் முழுவதும் கோத்தபாய ஜனாதிபதியாக இருக்கமாட்டார் அத்துடன் அவர் இப்போது வலையில் தப்பியிருந்தாலும் ஒரு நாளைக்கு அவரும் அவருக்கு உதவியவர்கள் மற்றும் ஆதரவளித்தவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவார்கள்''* என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். *நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட காலத்திற்கு கூட காத்திருக்க வேண்டிவரும் என்பதை இந்த தாமதம் குறிக்கின்றது. ''ஒரு நாளைக்கு கோத்தபாயவின் பதவிக்காலம் முடிவுக்குவரும் போது நீதி சாத்தியமாகும் என்ற உண்மையினால் நாங்கள் பலமடைந்துள்ளளதாக உணர்கின்றோம் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.''*

ITJP சர்வதேச சட்ட நிறுவனமான கோஸ்பெல்ட் LLP உடன் இணைந்து ஆரம்பத்தில் சித்திரவதையில் இருந்து உயிர்தப்பிய றோய் சமதானம்[1] என்பவரின் சார்பாக ஏப்பில் 2019 இல் மத்திய மாவட்டத்திற்கான அமிரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் சிவில் நட்டஈட்டு வழக்கினை தயார்செய்தார்கள். 26 யூன் 2019 இல் இந்த முறைப்பாடனது பாதுகாப்பிற்காக[2] வேண்டுமென்றே பெயர்கள் வெளியிடப்படாமல் மேலும் எட்டு தமிழர்கள் , இரண்டு சிங்களவர்கள் என பத்து வழக்குத்தொடுநர்கள் சேர்க்கப்பட்டு பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்த வழக்கானது சித்திரவதையால் பாதிக்கப்பட்டவரைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது , இந்தச் சட்டமானது சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க நீதிமன்றங்களில் சட்ட ரீதியான நிவாரணத்தை வழங்குகின்றது. அந்த நேரத்தில் திரு ராஜபக்ச அமெரிக்க - இலங்கை இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்ததுடன் 07 ஏப்பிரல் 2019 இல் கிளின்டேல் கலிபோர்ணியாவிலுள்ள றேடர் ஜோஸ் இனுடைய வாகனத்தரிப்பிடத்தில் வைத்து அவருக்கு எதிரான அறிவித்தல் வழங்கப்பட்ட போது அவர் அமெரிக்க மண்ணில் இருந்தார்.

*''எமது கட்சிக்காரர்கள் திரு ராஜபக்ச கொடுமையான துஸ்பிரயோகங்களுக்கு பொறுப்பானவர் என மோசமான சாட்சியத்தை வழங்கியுள்ளார்கள் அத்துடன் சர்வதேச சட்டத்தின் கீழ் இந்தக் குற்றங்களுக்கு அவர் இறுதியாக பதில் சொல்லுவார்''* என கோஸ்பெல்ட் LLP இன் மனித உரிமைகள் சட்டத்தரணி ஸ்க்கொட் கில்மோர் தெரிவித்துள்ளார். *திரு ராஜபக்சவை இப்போது ஜனாதிபதியாக அங்கீகரித்தல் என்பது எதிர்காலத்தில் அவரால் பாதிக்கப்பட்டவர்கள் அவரைப் பொறுப்புகூற வைப்பதில் இருந்து தடுக்காது''.*

நீதிமன்ற ஆவணங்களில், திரு ராஜபக்சவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களில் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த பயங்கரமான மீறல்களை விபரித்துள்ளார்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் சூடாக்கப்பட்ட இரும்புக்கம்பியால் சூடு வைக்கப்பட்டார்கள் , கேபிள்களால் அடிக்கப்பட்டார்கள், பெற்றோலில் தோய்க்கப்பட்ட பிளாஸ்டிக் பைகள் தலைகளிற்கு மேலாக போடப்பட்டு மூச்சுத்திறணச் செய்யப்பட்டார்கள் அத்துடன் அவர்களில் ஆறு பேர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள் அத்துடன் பாலியல் துன்புறுத்தலுக்கும்[3] உட்படுத்தப்பட்டார்கள். ஒரு தமிழ் வழக்குத்தொடுநர் 2009 இல் சிவில் யுத்தம் முடிவடைந்த பின்னர் மூன்று வருடங்களாக பாலியல் அடிமையாக நடத்தப்பட்டதாக விபரிக்கின்றார். அவரும் வேறு இளம் தமிழ்ப் பெண்களும் இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டார்கள் அங்கு இரவு நேரங்களில் கடமையில் இல்லாத இராணுவத்தினர் எந்தப் பெண்ணை வெளியில் கொண்டு சென்று பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துவது என தெரிவு செய்வார்கள். அவர்கள் கற்பமாவதைத் தடுப்பதற்காக குடும்பக்கட்டுப்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

---

1 http://www.itjpsl.com/assets/press/Samathanam-complaint_file_stamped.pdf

2 http://www.itjpsl.com/assets/press/ECF-No.-0066-Plffs-Motion-to-Proceed-Anonymously.pdf

3 http://www.itjpsl.com/assets/press/Rajapaksa-First-Amended-Complaint-Docket-No-35-6.26.19.pdf

இந்த முறைப்பாடானது அந்த நேரத்தில் திரு ராஜபக்சவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இராணுவப்புலனாய்வு, குற்ற விசாரணை திணைக்களம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் விசேட புலனாய்வு சேவை உட்பட்ட பொறுப்பான பல்வேறு அரசாங்க முகவர்களை அடையாளங்கண்டுள்ளது. வழக்குத்தொடுநர்கள் தமது சித்திரவதையுடன் நேரடியாக தொடர்புபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்படும் பாதுகாப்பு அதிகாரிகளின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த அதிகாரிகளில் சிலர் திரு ராஜபக்சவிடமிருந்து நேரடியான அறிவுறுத்தல்களைக் பெற்றுக் கொண்டார்கள் என குற்றஞ்சாட்டப்படுகின்றது. சித்திரவதை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட பல குற்றவாளிகள் நீதிமன்ற ஆவணங்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள் அத்துடன் இப்பொழுதும் பொலிஸ் மற்றும் இராணுவத்தில்[4] சேவையாற்றுகின்றார்கள்.

*"இந்த வழக்கில் தொடர்புபட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு எதிராக பழிவாங்கல்கள் இப்பொழுது இருக்குமேயானால் இதற்கு யார் பொறுப்பு என்பது தெள்ளத்தெளிவாகும்"* ,*"சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருக்கும்* என சூக்கா எச்சரித்துள்ளார், ஏப்பிரலில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதும் திரு ராஜபக்சவை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் தனிநபர்கள் பாதிக்கப்பட்டவரை நேரடியாகத் தொடர்பு கொண்டு அவரை[5] அச்சுறுத்தியமையால் திரு சமதானத்தின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஒரு நிறுத்த தடை அறிவித்தலை தாக்கல் செய்ய வேண்டியிருந்தது.

*"இந்த வழக்கின் றோய் சமதானம் மற்றும் 10 பெயர்குறிப்பி விரும்பாத ஆண் மற்றும் பெண் வழக்குத்தொடுநர்களுக்கு அவர்கள் இதற்காக முன்வருவதில் அவர்களுடைய பாரிய துணிவிற்காக ஒரு பெரிய கடன் செலுத்தவேண்டிய பொறுப்பு எல்லா இலங்கையர்களுக்கும் உண்டு"* என கோஸ்பெல்ட் LLP இன் தலைவர் மைக்கெல் கோஸ்பெல்ட் தெரிவித்தார். *"நாங்கள் அவர்கள் மீது மிகப்பெரிய மரியாதையைக் கொண்டுள்ளோம் அத்துடன் எதிர்காலத்தில் ஒரு நாள் அவர்கள் நீதியைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என நம்புகின்றோம்".*

## செய்தி ஆசிரியர்களுக்கான குறிப்புகள்

**றோய் சமதானம் பற்றி**

றோய் சமதானம் ஒரு கனடா நாட்டவர் செப்டெம்பர் 2007 அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ச இன் நேரடிப் பொறுப்பில் இருந்த இலங்கைப் பொலிசாரால் இலங்கை தலைநகர் கொழும்பில் பொய்க்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். தன்னுடைய மனைவியை திருமணம் செய்ய இலங்கைக்கு சென்ற திரு சமதானம் மூன்று வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டதுடன் வழக்கறிஞரை அல்லது நீதிபதியை பார்ப்பதற்கும் மீண்டும் மீண்டும் மறுக்கப்பட்டார். திரு ராஜபக்சவின் கட்டளையின் கீழ் காவலாளிகள் திரு சமதானத்தை சித்திரவதை செய்தார்கள், அவருடைய மனைவியையும் பிள்ளையையும் பாலியல் வன்புணர்வு செய்து கொல்வோம் எனவும் அச்சுறுத்தியதுடன் மற்றைய சிறைக்கைதிகளுக்கு மின்சாரம் பாய்ச்சுவதை பார்க்கச் செய்தார்கள். அவர் ஆகஸ்ட் 2010 இல் மனு ஒப்பந்த அடிப்படையில் விடுதலை செய்யப்படமுன்னர் போலி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அவரது விடுதலையின் பின்னர் , திரு சமதானம் வெளிப்படையான வக்கீலானார். 2011 இல் , கனடாவின் பாராளுமன்றத்தில் அவர் தனக்கு நடைபெற்ற கொடுமையைப் பற்றி சாட்சியமளித்தார். 2016 இல், சமதானம் ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வழக்கில் வெற்றி பெற்றார் ஆனால் இலங்கை இழப்பீட்டு தீர்ப்புக்கு கீழ்ப்படிய தவறிவிட்டது.

**ஸ்கொட் கில்மோர் அவர்கள் பற்றி**

ஸ்கொட் கில்மோர் வாஷிங்டனை தளமாக கொண்ட ஒரு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி ஆவார். இவர் ISIS பணையக்கைதியாக இருந்த ஜேம்ஸ் போலே குடும்பத்தினர் மற்றும் கெயிட்டியில் பேபி டொக் டுவாலியரால் பாதிக்கப்பட்டவர்கள் அடங்கலாக உலகம் முழுவதிலும் சித்திரவதைகள் மற்றும் போர்க்குற்றங்களிலிருந்து மீண்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் வகித்தவர். சண்டே டைம்ஸ் ஊடகவியலாளர் மேரி கொல்வின் கொல்லப்பட்டதற்காக சிரியாவின் அசாத் அடக்குமுறை அரசுக்கு எதிராக 2019 இல் இவர் 303.6 மில்லியன் டொலர்களை வென்றவர்.

**கோஸ்பெல்ட் பற்றி**

கோஸ்பெல்ட் நிறுவனம் பேர்லின், போஸ்டன், பிரசெல்ஸ், டுசல்ட்றொப், லண்டன், ஸ்ரொக்ஹோம், நியூயோக், பாரிஸ், பிலடெல்பியா, சான் பிரான்ஸிஸ்கோ மற்றும் வாஷிங்டன் டிசி என பல நகரங்களில் அலுவலகங்களை கொண்ட ஒரு முன்னணி சர்வதேச சட்ட நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் குறிப்பாக நம்பிக்கைக்கு எதிரான / வணிகப்போட்டி, நிதிச் சேவைகள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு, சூழலியல், வெகுஜன சித்திரவதைகள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் என பெரும்பாலும் சர்வதேச பரிமானங்களுடனான சிக்கல்நிறைந்த வழக்குகளில் பரந்துபட்ட அளவிலான நிபுணத்துவத்தை கொண்டுள்ளது. ஹோஸ்பெல்ட் நிறுவனம் மட்டுமே அமெரிக்கா ஐரோப்பா இரண்டிலும் நம்பிக்கைக்கு எதிரான / வணிகப்போட்டி சட்டத்தை தனியார் அமுலாக்கம் செய்வதில் லீகல் 500 மற்றும் சேம்பர்ஸ் & பாட்னர்ஸ் அமைப்புகளால் கோரிக்கையாளர்களின் முதல் தரமான ஒரே நிறுவனம் என்ற தகுதிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**ITJP பற்றி**

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு தென்னாப்பிரிக்காவின் நிலைமாற்று நீதி சார்ந்த வல்லுநர் ஜஸ்மின் சூக்கா அவர்களால் நடாத்தப்படுகின்ற ஒரு அரசு சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போரின் இறுதிக்கட்டம் மற்றும் போருக்கு பிந்தயை காலம் தொடர்டபுடைய பாரிய சான்றாவணங்களையும் வேறுபல தகவல்களையும் கொண்டுள்ளது. ஆகஸ்ட் 2017 இல் ITJP அமைப்பு சிலி, பிரேசில், பெரு மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் அங்கு ராஜதந்திரியாக இருந்த இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஒருவருக்கு எதிராக போரில் குற்றமென்று கருதப்பட்ட அவரது செயற்பாடு மற்றும் சித்திரவதைக்காக எல்லைகளை கடந்த 4 வழக்குகளை தாக்கல் செய்தது.

---

[4] http://www.itjpsl.com/assets/press/ECF-No.-0066-3-Exhibit-B-to-Sooka-Decl.pdf

[5] http://www.itjpsl.com/assets/press/Dkt.-024_Plaintiffs-Ex-Parte-App-and-Memo.pdf

http://www.itjpsl.com/assets/press/Dkt.-024-1-Sweeney-Decl.-ISO-Ex-Parte-Application.pdf